2012 மே 9]

234—

கடலுக்குள் காற்றாலை

***1375—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலுக்குள் காற்றாலை அமைத்து மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலுக்குள் காற்றாலை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

235—

கழிவுநீர்

***3142—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு காளிங்கராயன் வாய்க்கால், காவிரி ஆறு ஆகியவற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

[2012 மே 9

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்றேன்.*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாநகராட்சி மற்றும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள காசிபாளையம், வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், சூரம்பட்டி ஆகிய நான்கு பகுதிகளுக்கும் சேர்த்து பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ரூ.209.22 கோடிக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகள் 5 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும்போது, ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் கழிவுநீர் பாதாளச் சாக்கடைமூலம் கொண்டு செல்லப்பட்டு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டினுடைய இரண்டு புறங்களிலும் பெரும்பள்ளம் ஓடைப் பகுதி என்கின்ற பகுதி இருக்கின்றது. அந்தப் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு நல்ல நீர்நிலைகள் ஓடிக்கொண்டிருந்தன. இப்பொழுது அதில் கழிவுநீர் கலந்து கழிவுநீர்க் கால்வாயாகவே மாறியிருக்கிறது. அதிலிருந்து செல்கின்ற கழிவுநீர்தான் அதிக அளவிலே ஆற்றிலே சென்று கலக்கின்றது. எனவே, அதற்கு ஏதேனும் திட்டங்கள் வகுக்கப்பட்டு, அந்த ஆற்றிலே கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்பொழுதே இந்தக் கருத்தைச் சொல்லிவிட்டார். இதிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் அங்கே செல்கிறதென்று*

2012 மே 9]

சொன்னார். இப்படி வெளியேறுகின்ற கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காகத்தான் 209 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே திட்டங்கள் தீட்டப்பட்டு, 5 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, இப்பொழுது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணி முடியும் தருவாயில் இந்தக் கழிவுநீர் அப்புறப்படுத்தப்பட்டு, அது சுத்திகரிக்கப்படும். அந்தக் கழிவுநீர் உறுப்பினர் சொல்லுகின்ற பகுதியில் செல்லாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

பத்திரப் பதிவு அலுவலகம்

***6053—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சியில் புதிய பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வருவாய் மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டத்திலே, மொடக்குறிச்சியிலே புதிதாக பதிவு அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*